**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU.S.VENKATESAN GREY GRANITE QUARRY, SF.NO. 9 (PART), LEASE OVER AN EXTENT OF 3.22.0 HA AT JAGADEVIPALAYAM VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 25.09.2024 AT 11.00 AM M/s. SRI MAHESHWARI MAHAL, D.NO. 1/190, NH-77, TIRUVANNAMALAI MAIN ROAD, ANCHOOR VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT- 635 104.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S.Babu | : | Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. R.Sridhar | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru.S.Venkatesan | : | The Proponent, M/s. Thiru.S.Venkatesan Grey Granite Quarry |
| 5 | Thiru.Dhanasekar | : | EIA Consultant, M/s. Eco Tech Labs Pvt Ltd , Salem |
| | Public | : | 41 Nos. (Attendence enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed Thiru.S.Venkatesan Grey Granite Quarry, SF.No. 9 (Part), lease over an

extent of 3.22.0 Ha at Jagadevipalayam Village, Bargur Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 21.08.2024 and bit notices regarding public hearing was issued to the public of Jagadevipalayam Village, Bagimanoor Village and Sappamuttlu Village and Jittobanapalli Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Revenue Divisional Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed grey granite quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.Dhanasekar, EIA Consultant, M/s. Eco Tech Labs Pvt Ltd, Salem of the proposed Grey Granite quarry project has made presentation about the proposed Colour Granite quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed colour granite quarry project.

The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Murugan, Anchoor Panchyat:**

Thiru. Murugan has said that through this Quarry Project, livelihood will be created for many families residing in this village and therefore he welcomes the proposed quarry Project.

2. **Thiru. Natarajan, Jagadevi Village:**

Thiru. Natarajan has said that the quarry management has already done a lot of help in the locality and has they planted many trees around the quarry to reduce air pollution in that area. He also said that the proposed project would provide direct and indirect employment to 30 to 40 number of people and therefore he welcomes the proposed quarry project.

3. **Thiru. Ganesan, Soolaamali Village:**

Thiru. Ganesan has said that the establishment of this quarry will provide livelihood to the local people and generate more direct and indirect employment to them.

4. **Thiru. Subramani, Jagadevi Village:**

Thiru. Subramani has said that the proposed quarry project will generate employment to 40 to 50 number of people and will provide employment to local truck drivers and JCP operators.

5. **Thiru. Velu, Jagadevi Village:**

Thiru. Velu has said that the road leading to the quarry is in bad condition and due to this, it is difficult to reach the government hospital and veterinary hospital situated in the village.

6. **Thiru. Kalairaj, Jagadevi Village:**

Thiru. Kalairaj has said that road leading to the quarry was not damaged and the road constructed by the government from the quarry to nearby lake in that area is in good condition.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 2 number of petitions were received on the proposed M/s. Thiru.S.Venkatesan Grey Granite Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Grey Granite Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| **District Environmental Engineer**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Hosur** | **Revenue Divisional Officer**<br>**Krishnagiri**<br>4/7 | **District Collector**<br>**Krishnagiri**<br>4/7 |

**திரு. சு. வெங்கடேசன் கிரே கிரானைட் குவாரி, சர்வே. எண். 9 (பகுதி) ஜெகதேவிபாளையம் கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட கிரே கிரானைட் குவாரி 3.22.0 ஹெக்டேர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 25.09.2024 அன்று திருவண்ணாமலை மெயின் ரோடு, அஞ்சூர் கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ மகேஷ்வரி மஹாலில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.S.பாபு | : | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er. ரா.ஸ்ரீதர் | | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு. சு. வெங்கடேசன் | : | உரிமையாளர்<br>திரு. சு. வெங்கடேசன் கிரே கிரானைட் குவாரி |
| 5 | திரு. தனசேகர் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள். ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை |
| | பொதுமக்கள் | : | 41 எண்ணிக்கை (வருகை<br>பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு. சு. வெங்கடேசன் கிரே கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, பொதுமக்கள் மற்றும் திரு. சு.

வெங்கடேசன் கிரே கிரானைட் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினந்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 21.08.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், ஜெகதேவிபாளையம், ஜிட்டோனப்பள்ளி கிராமம், பாகிமானூர் கிராமம், சப்பமுட்டுலு கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் கிரே கிரானைட் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர், திரு. சு. வெங்கடேசன் கிரே கிரானைட் குவாரி உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு. சு. வெங்கடேசன் கிரே கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. தனசேகர், தி/ள். ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கிரே கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. முருகன், அஞ்சூர் பஞ்சாயத்து :**

திரு. முருகன் அவர்கள், இக்குவாரி திட்டத்தின் மூலம் பல்வேறு குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் உருவாகும் என்றும் அதனால் இக்குவாரி திட்டத்தை தான் வரவேற்பதாக கூறினார்.

2. **திரு. நடராஜன், ஜெகதேவி கிராமம்:**

திரு. நடராஜன் அவர்கள், இக்குவாரி நிர்வாகத்தினர் ஏற்கனவே உள்ளூரில் நிறைய உதவிகள் செய்துள்ளனர் என்றும் குவாரியை சுற்றிலும் மரங்களை நட்டு காற்று மாசினை குறைத்துள்ளனர் என்று கூறினார். மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள

இத்திட்டம் வருவதின் மூலம் 30 முதல் 40 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அதனால், இக்குவாரி திட்டத்தை தான் வரவேற்பதாக கூறினார்.

**3. திரு .கணேசன், சூலாமலை கிராமம்:**

திரு. கணேசன் அவர்கள், இக்குவாரி திட்டம் வருவதின் மூலம் உள்ளூர் மக்களுக்கு வாழ்வதாரம் ஏற்படும் என்றும் அதிகளவில் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு உருவாகும் என்றும் கூறினார்.

4. **திரு .சுப்பிரமணி, ஜெகதேவி கிராமம்:**

திரு. சுப்பிரமணி அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்தின் மூலம் 40 முதல் 50 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் உள்ளூரில் உள்ள கனரக வாகன ஓட்டுநர்கள் மற்றும் ஜே.சி.பி இயக்குபவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார்

5. **திரு . வேலு, ஜெகதேவி கிராமம்:**

திரு. வேலு அவர்கள், குவாரிக்கு அருகிலுள்ள சாலையானது பழுதடைந்துள்ளது என்றும் இதனால், அரசு மருத்துவமனை மற்றும் கால்நடை மருத்துவமனைக்கு செல்வதில் சிரமம் உள்ளது என்று கூறினார்.

6. **திரு . காளிராஜ், ஜெகதேவி கிராமம்:**

திரு. காளிராஜ் அவர்கள், குவாரிக்கு செல்லும் சாலையானது பழுதடையவில்லை என்றும் மேலும், அரசாங்காத்தால் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சாலையானது அருகில் உள்ள எரி வரையில் நல்ல நிலைமையில் உள்ளது என்று கூறினார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. சு. வெங்கடேசன் கிரே கிரானைட் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 2 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு. சு. வெங்கடேசன் கிரே கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரனைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (ஒ). செல்வபெருமாள் 22/9/2021 | | |
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் | வருவாய் கோட்டாட்சியர் | மாவட்ட ஆட்சியர் |
| தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| ஓசூர் | 5/7 | 5/7 |